செ.வெ.எண்: 10/ஜூலை நாள் : 06.07.2016

இராமநாதபுரம் மாவட்டம்

அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசு உதவி பெறும் தனியார் / சுயநிதி தொழிற்பயிற்சி நிலையங்களால் ஒப்படைப்பு செய்யப்படும் 50% அரசு இட ஒதுக்கீடு இருக்கைகளுக்கான சேர்க்கைக்குரிய கலந்தாய்வு 11.07.2016 முதல் 15.07.2016 வரை நடைபெறவுள்ளது.

2016—ம் வருடத்திற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் அரசு உதவி பெறும் / தனியார் சுயநிதி தொழிற்பயிற்சி நிலையங்களால் ஒப்படைப்பு செய்யப்படும் 50% அரசு இட ஒதுக்கீடு இருக்கைகளுக்கான சேர்க்கைக்குரிய கலந்தாய்வு பரமக்குடி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் **11.07.2016** முதல் **15.07.2016** முடிய நடைபெற உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் Online மூலம் விண்ணப்பம் சமர்ப்பித்த அனைவருக்கும் கலந்தாய்வு பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தான் நடைபெறுகிறது. கலந்தாய்வுக்கான நேர்காணலுக்குரிய அழைப்பு கடிதம் அவரவர் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. அழைப்பு கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் தங்கள் மதிப்பெண் அடிப்படையில் பரமக்குடி, இராமநாதபுரம் மற்றும் முதுகுளத்துர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒட்டப்பட்டுள்ள தரவரிசைப்பட்டியலை பார்க்கவும்.

சிறப்பு இனத்தவர்களுக்கான கலந்தாய்வு

இச்சேர்க்கையில் சிறப்பு இனத்தவருக்கான முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்களுக்கு, மாற்றுத்திறனாளிகளுக்கு, விதவைகளுக்கு, சட்டப்படி விவாகரத்து பெற்று கணவரிடமிருந்து பிரிந்து வாழ்பவர்களுக்கு மற்றும் மாநில அளவில் விளையாட்டுப்போட்டிகளில் முதன்மையாக வந்த மாணவ/ மாணவியருக்கு மட்டும் சிறப்பு கலந்தாய்வு வருகின்ற **11.07.2016** காலை **10.00** மணி முதல் **1.00** மணி வரை நடைபெறவுள்ளது.

சிறப்பு இனத்தவருக்கான விண்ணப்பித்த அனைவருக்கும் நேர்காணலுக்கான அழைப்புகடிதம் அவரவர் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணலுக்குரிய அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்களும் அன்றைய தினம் இந்நிலையத்திற்கு வரவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்காணும் இனங்களில் விண்ணப்பதாரர் விண்ணப்பித்த சிறப்பு இனங்களுக்குரிய அசல் சான்றிதழ் மற்றும் **TC, Mark Sheet, and Community Certificate** ஆகிய கல்வி சான்றிதழ்களுடன் வரவேண்டும். அசல் சான்றிதழ்கள் உண்மை என குழு முடிவு செய்த பின்னரே ஏற்றுக்கொள்ளப்படும்.

மகளிர்களுக்கான கலந்தாய்வு

8—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்த மகளிர் மற்றும் **10**—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்த மகளிருக்குமான சேர்க்கை **11.07.2016** அன்று மதியம் **2.00** மணி முதல் மாலை **5.00** மணி வரையிலும் நடைபெறுகிறது. இதர கலந்தாய்வு அவரவர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் கலந்தாய்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் கீழ்காணும் விபரப்படி நடைபெறும்.

8—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கான கலந்தாய்வு

8—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்த பிரிவுகளுக்கான கலந்தாய்வு 12.07.2016 முற்பகல் 9.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை கீழ்க்காணும் தரவரிசையின்படி நடைபெறவிருக்கிறது.

முற்பகல் 9.00 மணி முதல் 1.00 மணி வரை தர வரிசை எண் 1 முதல் 200 வரை(மதிப்பெண்98.5 முதல் 47.5 வரை)

பிற்பகல் 2.00 மணி முதல் 5.00 மணி வரை தர வரிசை எண் 201 முதல் 346 வரை (மதிப்பெண்47.5 முதல் 14.5 வரை)

10—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கான கலந்தாய்வு

13.07.2016 முதல் 15.07.2016 முடிய ஆகிய நாட்களில் 10—ம் வகுப்பு தகுதியில் விண்ணப்பித்த பிரிவுகளுக்கான கலந்தாய்வு கீழ்காணும் தர வரிசையின்படி நடைபெறவிருக்கிறது.

13.07.2016 அன்று காலை 9.00 மணி முதல் பகல் 1.00 மணிவரை தர வரிசை எண் 1. முதல் 200 வரை (மதிப்பெண்100 முதல் 70.5 வரை)

அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தர வரிசை எண் 201 முதல் 350 வரை (மதிப்பெண் 70.5 முதல் 63.5 வரை)

14.07.2016 அன்று காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணி வரை தர வரிசை எண் 351 முதல் 550 வரை (மதிப்பெண் 63.5 முதல் 56 வரை)

அன்று பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை தர வரிசை எண் 551 முதல் 700 வரை (மதிப்பெண் 56 முதல் 51.5 வரை)

15.07.2016 அன்று காலை 9.00 மணிமுதல் 1.00 மணிவரை தரவரிசை எண் 701 முதல் 916 வரை .(மதிப்பெண் 51.5 முதல் 35.5)

விண்ணப்பித்த அனைவருக்கும் நேர்காணலுக்கான அழைப்பு கடிதம் அவரவர் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இணையதளத்தில் வெளியீடு

விண்ணப்பித்த அனைவருக்கும் அவரவர் எடுத்த மதிப்பெண் அடிப்படையில் 8-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்புக்கான தரவரிசை பட்டியல் **www.govtitiparamakudi.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பம் செய்து நேர்காணலுக்கான அழைப்புகடிதம் கிடைக்கப்பெறாதவர்களும் அன்றைய தினம் அனைத்து அசல் கல்வி சான்றிதழ்களுடன் பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வரை சந்திக்கலாம்.

மேற்கண்ட தகவலை பரமக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்